இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

திங்கள்கிழமை 13.07.2026



# மனித உயிர் வேட்டைக்காரன்!

**41** பேர் பச்சைப் படுகொலைக்கு காரணமாக இருந்து விட்டு எப்படித்தான் வெட்கமில்லாமல், கூச்சமில்லாமல் இன்னமும் பாட்டுப் பாடிக் கொண்டிருக்கிறார் விஜய் எனத் தெரியவில்லை. விஜய் எவ்வளவு குரூரமானவர் என்பதற்கு உதாரணம்தான் அவரது கரூர் பேச்சு.

“ஓடு... ஓடு.. வர்றான் பாரு வேட்டைக்காரன்” என்று பாடி ஆடியதற்கு பதிலாக **“வர்றான் பாரு மனித உயிர் வேட்டைக்காரன்”** என்று பாடி ஆடி இருக்கலாம். **“வர்றான் பாரு நரபலி வேட்டைக்காரன்”** என்று பாடி ஆடி இருக்கலாம். ஏனென்றால் கரூரில் நடந்தது அதுதான்.

அவரது விளம்பர வெறிக்காகவும், புகழ் அரிப்புக்காகவும், தான் இத்தனை உயிர்கள் பலியானார்கள். சூட்டிங் எடுப்பதற்காக, காட்சியில் தத்ரூபத்தை உருவாக்குவதற்காகத்தான் மக்களைக் காத்திருக்க வைத்து அந்த வெறித்தனமான காட்சியை எடுக்க நினைத்தார்கள். ஃபயர் விடும் காட்சியை எடுப்பதற்காகத்தான் 41 உயிர்கள் பலியானது.

ஒரு வீட்டில் ஒரு துக்கம் நடந்து விட்டால், அதுவும் மிகமிக சோகமான துக்கமாக அமைந்துவிட்டால் அதனை தன் வீட்டுச் சோகங்களைப் போல நெஞ்சில் ஈரமுள்ள அனைவரும் பல ஆண்டுகள் நடந்து கொள்வார்கள். இதெல்லாம் நெஞ்சில் ஈரம் உள்ளவர்களுக்குத்தான் பொருந்தும். நெஞ்சில் வஞ்சகத்துடன் வாழும் விஜய் போன்றவர்களுக்கு பொருந்தாது. ரசிகனின் வியர்வையால் ஹீரோவாகி, ரசிகனின் ரத்தத்தால் கட்சி நடத்த நினைக்கும் வஞ்சக விஜய்யிடம் இது போன்ற குரூரமான, கொடூரமான, வன்மமான பேச்சுகள்தான் வாயில் இருந்து வரும்.

**‘எனக்கு வாயில வந்திறப் போகுது’** என்று திருச்சியில் நர மொழி உதிர்த்த விஜய், **‘ஒரு ..... ம் கிடையாது’** என்று கரூரில் அது என்ன வார்த்தை என்பதைச் சொல்லி இருக்கிறார். அடுத்து சென்னையில் பேசும் போது **‘சென்னையின் புகழ் மிக்க சொல்லை’** உதிர்ப்பார். அதையும் எழுதிக் கொடுப்பார்கள். டயலாக் விடுவார். தான் இப்போது விசிலடிச்சான் குஞ்சுகளின் தலைவன் அல்ல, தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்பதை அவர் முதலில் உணர வேண்டும். எவ்வளவு பெரிய பெரிய தலைவர்கள் இருந்த நாற்காலி, எத்தகைய தலைக்கனம் கொண்ட மனிதன் கையில் சிக்கி இருக்கிறது என்பதுதான் வேதனைக்குரியது.

**கரூரில் மனித உயிர்கள் செத்து விழுந்த போது தலைதெறிக்க கரூரை விட்டு திருச்சிக்கு ‘ஓடு ஓடு’ என ஓடிவந்தது விஜய். மரணங்களின் எண்ணிக்கை 30 ஐ தாண்டிவிட்டது என்று சொல்லப்பட்ட பிறகும் திருச்சியை விட்டு ‘ஓடு ஓடு’ என்று ஓடி வந்தது விஜய். 41 பேர் இறந்து போனார்கள் என்று சொன்ன பிறகும் சென்னை வீட்டுக்குள் பதுங்கியது யார் விஜய்.**

புஸ்சி ஆனந்த் ஓடிவிட்டார். ஆதவ் அர்ஜூனா ஓடி விட்டார். நிர்மல் குமார் ஓடி விட்டார். த.வெ.க.வின் கரூர் மாவட்டச் செயலாளர் மதியழகன் ஓடிவிட்டார். சி.. பி.ஐ.க்கு வழக்கு மாறாமல் இருந்திருந்தால் இவர்கள் அனைவரும் இன்று வரை தலைமறைவாகவே இருந்திருப்பார்கள்.

இப்படி ஒரு சோகம் தனது ஊருக்குள் நடந்துவிட்டது என்று அறிந்ததும் அடுத்த நிமிடமே மருத்துவமனைக்கு வந்தவர் செந்தில் பாலாஜி. அவரை உடனடியாகச் செல்ல உத்தரவிட்டவர் மனிதாபிமான முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். எந்தக் கட்சிக் கூட்டத்தில் நடந்தது என்பதைப் பற்றி எல்லாம் கவலைப்படாமல் நடவடிக்கை எடுக்கச் சொன்னார் அன்றைய முதலமைச்சர் அவர்கள். அரசு இயந்திரம் உரிய வகையில் செயல்படாமல் இருந்தால் இன்னும் பல உயிர்கள் போயிருக்கும். நூற்றுக்கும் மேற்பட்டவர்களை மருத்துவ மனையில் சேர்த்து காப்பாற்றியவர் செந்தில் பாலாஜி. மனித உயிர்களைக் காப்பாற்றியவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின். ஆனால் நரபலி வேட்டையை நடத்திக் கொண்டிருப்பவர் கையில் இன்றைய அதிகாரம் சிக்கி இருக்கிறது.

அந்த சூழலிலும் விஜய்யை குறைசொல்லவில்லை அன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். **‘எந்த அரசியல் கட்சித் தலைவரும் தனது தொண்டர்கள் பலியாவதை விரும்ப மாட்டார்கள்’** என்று விஜய்க்கு ஆதரவாக தான் அன்றைய முதலமைச்சர் பேசினார். அந்தப் பெருந்தன்மை மனிதரைத்தான் விஜய் இன்று திட்டித் தீர்க்கிறார்.

**நன்றாற்ற லுள்ளுந் தவறுண்டு அவரவர்**

**பண்பறிந் தாற்றாக் கடை** என்கிறார் திருவள்ளுவர். ஒருவருக்கு நன்மை செய்யும் போது அவரின் குணநலன்களை முழுமையாகப் புரிந்து கொண்டு அதற்கேற்ப செய்யாவிட்டால், அந்த நன்மையும் தீமையாகவே முடிந்துவிடும் என்று அன்றே சொல்லி இருக்கிறார் வள்ளுவர். விஜய் போன்றவர்களின் குணம் அறிந்து செயல்பட்டிருக்க வேண்டும் என்பதுதான் காலம் நமக்குக் கற்றுத்தரும் பாடம் ஆகும்.

எஃப்.ஐ.ஆரில் விஜய் பெயரைச் சேர்த்திருந்தால், ‘ஜனநாயகன்’ படத்துக்கு டான்ஸ் ஆடி இருக்க முடியாது. **இவர் சோகமாக இருந்தாராம், வலியோடு இருந்தாராம். அந்த நேரத்தில் இவர் மீது பழி போட்டு விட்டார்களாம். இவரது சோகத்தைத் தான் மலேசியாவில் பார்த்தோமே. 41 பேர் மரணத்துக்குத் தான் சோகமாக மலேசியாவில் பல்லாயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் டான்ஸ் போட்டு கொண்டாடினாரே!**

படத்தில்தான் சோகக் காட்சி முடிந்ததும், சம்பந்தமில்லாமல் குத்துப்பாட்டு வரும். அப்படிக் கொண்டாடியவர் விஜய். அவர் 10 மாதம் கழித்து சோகத்தோடு கருப்புச் சட்டை போட்டுக் கொண்டு சோகமான முகத்தை வைத்துக் கொண்டு குரூரமான பேச்சை பேசுகிறார்.

சி.பி.ஐ.க்கு மட்டும் வழக்கு மாறாமல் இருந்திருந்தால் விஜய், தலைமறைவாகத்தான் ஓடிக் கொண்டு இருந்திருப்பார். ஓடு ஓடு ஓடு என ஓடிக் கொண்டு இருந்திருப்பார்.

கரூரில் 41 பேர் பலியானதை, **‘மனிதப் பேரிடர்’** என்று சொன்னது சென்னை உயர்நீதிமன்றம். **‘இதற்கு விஜய்யும், விஜய் கட்சி நிர்வாகிகளும் தான் பொறுப்பேற்க வேண்டும்’** என்றும் சொன்னது சென்னை உயர்நீதிமன்றம். இந்த பலிக்கு யார் காரணம் என்பதை சி.பி.ஐ. விசாரிக்க உத்தரவிட்டது உச்சநீதிமன்றம். ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதியின் கண்காணிப்பில் இது நடக்க வேண்டும் என்று சொன்னது உச்சநீதிமன்றம்.

அந்த பிரச்சினை பற்றி பொதுவெளியில் பேசுவதே நீதிமன்ற அவமதிப்பு ஆகும். விசாரணையைப் பாதிக்கும் செயல் ஆகும். பாதிக்கப்பட்டோர் குடும்பத்துக்கு அழுத்தம் கொடுக்கும் செயல்களைச் செய்தது தவறு ஆகும். பிரச்சினையில் தொடர்புடைய 19 காவல் துறை அதிகாரிகள், அலுவலர்களை பல்வேறு ஊர்களுக்கு மொத்தமாக தூக்கியடித்ததும் தவறு ஆகும். அதாவது **தன்னைக் காப்பாற்றிக் கொள்ள துடிக்கிறார் விஜய்.**

தனது தவறுகளை மறைக்க செந்தில் பாலாஜி ஓடுகிறார், முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு சிங்கப்பூர் போய்விட்டார் என்று கீழ்த்தரமான பேச்சுகளைப் பேசி திசை திருப்புகிறார். செந்தில் பாலாஜி எங்கும் ஓடவில்லை. உள்ளூரில்தான் இருக்கிறார். மருத்துவச் சிகிச்சைக்காகத் தான் முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு சென்றுள்ளாரே தவிர வேறல்ல. இது போன்ற திசை திருப்பல்கள், அரைமணி நேர பிரேக்கிங் மட்டுமே!

**விஜய் ஆட்சி நடத்தவில்லை. ஆட்டம் நடத்திக் கொண்டு இருக்கிறார். அது அருவெறுப்பாக இருக்கிறது என்பதை அவருக்கு வாக்களித்தவர்களே உணரத் தொடங்கி விட்டார்கள்.**

## கொரோனா வார்டில் அன்று ஆய்வு செய்த

# தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின்தான் ரியல் மாஸ் ஹீரோ!

## இயக்குநர் சுசிகணேசன் பேச்சு வீடியோ வைரல்!

**சென்னை, ஜூலை 13 -**

**கொரோனா காலகட்டத்தில் நேரில் சென்று வார்டில் ஆய்வு செய்த முன்னாள் முதலமைச்சர் - தி,மு,க, தலைவர் மு.க.ஸ்டாலின் தான் ரியல் ஹீரோ என்று இயக்குநர் சுசி கணேசன் பேசிய வீடியோ ஒன்று வைரலாகி வருகிறது**



திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் குறித்து, திரைப்பட இயக்குநர் சுசி கணேசன் பேசிய வீடியோ ஒன்று தற்போது வைரலாகி வருகிறது.

2021 ஆம் ஆண்டு மே 30ம் தேதி கொரோனா காலகட்டத்தில் கோவை அரசு மருத்துவமனையில் முன்னாள் முதலமைச்சர் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் ஆய்வு மேற்கொண்டதை குறிப்பிட்டு பேசிய சுசி கணேசன் ரீல் ஹீரோவுக்கும் ரியல் ஹீரோவுக்குமான வித்தியாசம் இது தான் என குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா பாதித்த ஒருவரை உறவினர்களே சந்திக்க அஞ்சிய நிலையில் முதல்வராக இருந்த தி,மு,க, தலைவர் நேரடியாக சென்று பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதலாக நின்றார் என்றும் அவர் நெகிழ்ச்சியுடன் பேசிய வீடியோ ஒன்று தற்போது வைரலாக பரவிவருகிறது .

## முனைவர் மா.இராசேந்திரன் தலைமை! – தமிழ் வளர்ச்சிக் கழகம் சார்பில்

# மறைமலையடிகள் 150வது பிறந்தநாள் விழா!

## குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் சிறப்புரையாற்றுகிறார்!

சென்னை, ஜூலை 13 -

தமிழ் வளர்ச்சிக் கழகம் சார்பில் மறைமலையடிகள் 150வது பிறந்தநாள் விழா 15.7.2026 புதன்கிழமை காலை 11 மணியளவில் சென்னை பல்கலைக்கழகம், நூற்றாண்டு விழா கட்டிடம்,முதல் தளம் அறை எண் 50ல் ( சேப்பாக்கம் ) நடைபெறுகிறது.

விழாவில் சென்னை பல்கலைக்கழகம் சைவ சித்தாந்தத் துறை தலைவர் பேராசிரியர் முனைவர் சா.சரவணன் வரவேற்புரை ஆற்றுகிறார்.

தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் முனைவர் ம. இராசேந்திரன் தலைமை வகிக்கிறார்.

விழாவில் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் சிறப்புரை யாற்றுகிறார்.

துணை வேந்தர் பொறுப்பு குழு உறுப்பினர் பேராசிரியர் முனைவர் எஸ். ஆம்ஸ்ட்ராங் முன்னிலை வகிக்கிறார்.

இவ்விழாவில் முனைவர் சாரதா நம்பியாரூரன், சென்னை பல்கலைக்கழக பதிவாளர் பேராசிரியர் முனைவர் ரீட்டா ஜான், இலங்கை திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினர் க.ச. குகதாசன், கனடா அனைத்துலகத் தமிழ் பேரவை தலைவர் நிமால் விநாயகமூர்த்தி, சென்னை பல்கலைக் கழக தமிழ் மொழித்துறை உதவி பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர் முனைவர் வாணி அறிவாளன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

சென்னை பல்கலைக் கழக தமிழ் இலக்கியத் துறை உதவி பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர் முனைவர் வே. நிர்மலர் செல்வி நன்றியுரையாற்றுகிறார்.

முனைவர் ஒப்பிலா மதிவாணன் ( தமிழ் வளர்ச்சிக் கழகம் ) நிகழ்ச்சியை தொகுத்து வழங்குகிறார்.

## காவிரி டெல்டா மாவட்டங்களை

# வறட்சி பாதித்த பகுதிகளாக அறிவிக்க வேண்டும்!

## மனிதநேய மக்கள் கட்சி தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. அறிக்கை!

சென்னை, ஜூலை 13 -

தமிழகத்தின் நெற்களஞ்சியமாக விளங்கும் காவிரி டெல்டா மாவட்டங்கள் இன்று கடுமையான வேளாண் நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றன. தென்மேற்கு பருவமழை பொய்த்ததுடன், காவிரி நீர் உரிய அளவில் தமிழகத்திற்கு கிடைக்காத தால் குறுவை சாகுபடி பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும் கடுமையான வாழ்வாதார நெருக்கடியில் சிக்கி யுள்ளனர்.



வழக்கமாக ஜூன் 12ஆம் தேதி திறக்கப்படும் மேட்டூர் அணை, போதிய நீரிருப்பு இல்லாத காரணத்தால் திறக்கப்படாதது டெல்டா விவசாயத்திற்கு மிகப்பெரிய பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. காவிரி நீர்வழங்கல் தொடர்பாக நடுவர் மன்றமும் உச்சநீதிமன்றமும் நிர்ணயித்துள்ள அளவிற்கு கர்நாடக அரசு நீரை திறந்து விடாததால் தமிழக விவசாயிகள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி யுள்ளனர்.

கடந்த ஆண்டு ஆறு இலட்சம் ஏக்கருக்கும் அதிகமாக நடைபெற்ற குறுவை சாகுபடி, இந்த ஆண்டு கடுமையாக குறைந்துள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில் கடந்த ஆண்டு சுமார் 1.94 இலட்சம் ஏக்கரில் நடைபெற்ற குறுவை சாகுபடி இந்த ஆண்டு சுமார் 89 ஆயிரம் ஏக்கராகக் குறைந்துள்ளது. அதேபோல் திருவாரூர் மாவட்டத்தில் 1.91 இலட்சம் ஏக்கரில் இருந்து வெறும் 64 ஆயிரம் ஏக்கராக சாகுபடி பரப்பளவு சரிந்துள்ளது. நாகப்பட்டினம் உள்ளிட்ட கடைமடை பகுதிகளில் நிலத்தடி நீர் வசதிகள் குறைவாக இருப்பதால் நிலைமை மேலும் மோசமடைந்துள்ளது.

நிலத்தடி நீரை நம்பி சாகுபடி மேற்கொண்டுள்ள விவசாயிகளும் மின்வெட்டு, குறைந்த மின்னழுத்தம், நிலத்தடி நீர்மட்ட சரிவு போன்ற காரணங்களால் கடுமையான சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். மேட்டூர் அணை திறக்கப்படும் என்ற நம்பிக்கையில் நிலத்தை உழுதும், விதைப்பிற்காகத் தயார்படுத்தியும் இருந்த ஆயிரக்கணக்கான விவசாயிகள் முதலீடு செய்த தொகையை இழந்து வேதனையில் உள்ளனர்.

குறுவை சாகுபடி நடைபெறாததால் விவசாயத் தொழிலாளர்களின் வேலைவாய்ப்பு முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் கிராமப்புற பொருளாதாரமே கடுமையாக பாதிக்கப்பட்டு, விவசாயத் தொழிலாளர்கள் வேறு வேலைகளைத் தேடி இடம்பெயர வேண்டிய சூழ்நிலை உருவாகி யுள்ளது. விவசாயி கள் மட்டுமல்லாமல் கால்நடை வளர்ப்போரும் தீவனப் பற்றாக்குறையை எதிர்கொள்ளும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

எனவே தமிழக அரசு உடனடியாக காவிரி டெல்டா மாவட்டங்களை வறட்சி பாதித்த பகுதி களாக அறிவிக்க வேண்டும். குறுவை சாகுபடி செய்ய முடியாமல் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் ஏக்கருக்கு ரூ.15,000 வீதம் வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும்.

மேலும் பிரதமரின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் “விதைப்பு/நடவு மேற்கொள்ள இயலாமை தொடர்பான இடர்” பிரிவின் அடிப்படையில் இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோல் சம்பா சாகுபடியை பாதுகாக்க சிறப்பு சம்பா தொகுப்பு திட்டத்தை அறிவித்து, மானிய விலையில் விதைகள், உரங்கள், டீசல் உள்ளிட்ட உள்ளீடுகளை வழங்க வேண்டும். நீண்டகாலமாக காத்திருக்கும் விவசாயி களுக்கு இலவச மின் இணைப்புகள் வழங்கப்பட வேண்டும்.

காவிரி நீர் உரிமையை உறுதிப்படுத்துவதற்காக கர்நாடக அரசின் மீது தேவையான சட்ட மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை தமிழக அரசு தீவிரப்படுத்த வேண்டும். காவிரி டெல்டா விவசாயத்தை பாதுகாப்பது என்பது விவசாயிகளை மட்டுமல்ல, தமிழகத்தின் உணவுப் பாதுகாப்பையும் பாதுகாப்பதாகும் என்பதை அரசு உணர்ந்து உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் பேராசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லா விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

## கள்ளிமந்தயத்தில் வாக்காளர்களுக்கு

# அர.சக்கரபாணி எம்.எல்.ஏ. நன்றி தெரிவித்தார்!

ஒட்டன்சத்திரம், ஜூலை 13 -

திண்டுக்கல் மாவட்டம் தொகுதிக்குட்பட்ட கள்ளிமந்தையம், சிக்கம் நாயக்கன்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் வாக்காளர்களுக்கு அர.சக்கரபாணி எம்.எல்.ஏ. நன்றி தெரிவித்து பேசினார். இது பற்றிய விவரம் வருமாறு;

திண்டுக்கல் மேற்கு மாவட்டச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் அர. சக்கரபாணி எம்.எல்.ஏ. நன்றி தெரிவித்து பேசினார்.

நிகழ்வில் ஒன்றிய செயலாளர் பி.சி. தங்கம், மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் தினேஷ், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆனந்தராஜ் உள்ளிட்ட சார்பு அணி நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதி கள்ளிமந்தயத்தில் வாக்காளர்களுக்கு முன்னாள் அமைச்சர் அர.சக்கரபாணி எம்.எல்.ஏ. நன்றி தெரிவித்து பேசினார்.